முருகப்பெருமான் துணை

**மகான் அல்லமாபிரபு அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.09.2022**, செவ்வாய்கிழமை

1. வருங்காலம் மக்களுக்குச் சாதகமாக
   வரம்பல தருகின்ற ஞானவள்ளலே
   அரங்கமகானே உன்பெருமை கூறி
   அனுகூல ஆசிதனை இனிதே
2. இனிதே சுபகிருது தரிவை திங்கள்
   இயம்பிட தசதிகதி குசன் வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 10ம் நாள், 27.09.2022 செவ்வாய்கிழமை)
   கனிவேலவன் சக்தியான அரங்கனுக்கு
   கண்டுரைப்பேன் அல்லமாபிரபு யானும்
3. யானுரைக்க அரங்க மகான் தரும்
   உபதேசமே உயர் மறையாகும்
   ஞானமாகத் தரும் சன்மார்க்கமே
   ஞானயுகம் படைக்கும் திறவுகோலாகும்
4. ஆகவே கலியுக மக்கள் தானும்
   ஆற்றல் தரும் பிரணவக்குடிலை
   வகைபட அனுகி வந்து
   வணங்கியே அருளமுது உண்டு
5. உண்டுமே அரங்கனை போற்றி
   உயர்வான மகாமந்திர தீட்சை
   தெண்டனிட்டு வணங்கிப் பெற்று
   தொடர் செபங்கள் ஞானிகள் பூசையாக
6. ஆகவே மக்கள் செய்து கொண்டு
   அனுகூலம் தரும் அன்னதானத்தை
   செகமெங்கும் செய்து வளர்த்து
   செப்பிடுவேன் ஜீவகாருண்யம் பெருக்க
7. பெருக்கவே மக்களிடை தெளிவு
   பிரச்சினைகளை வெல்லும் வண்ணம்
   கருத்தாக ஆற்றல்கள் கூடியே
   கந்தப் பெருமான் அருளாசி கிட்டி
8. கிட்டியே உலகை மாற்றுகின்ற
   குறைகளை குற்றங்களை களைகின்ற
   தட்டாத சக்தி பலமும் வரமுமாக
   தவராஜனால் அனுகூலம் பெருகி
9. பெருகியே ஞானவான்கள் படையை
   பேருலகம் எங்கிலும் நிறுவியே
   ஆறுமுகன் தலைமை ஏற்கின்ற
   ஆனந்தமான ஞான ஆட்சிகள் தானும்

10. தானாக தன்னார்வ தொண்டுமாக
தரணியெங்கும் சேவை மிகுந்து
ஞானதேசிகன் அவதார நோக்கமாக
நாடெங்கிலும் அற்புதம் நிகழ்ந்து

11. நிகழ்ந்துமே ஞானச் சித்தர்காலம்
நீதிமான்களை கொண்டு நிரம்பி
அகிலமே ஞானிகள் ஆட்சிதனை
அரங்கனின் அனுகூலமாக அடையும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–